



# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

**Online Newspaper in Tamil** **Vol.10** **06.08.2012**






- முதற்பக்கம்
- யாழ்மாநகரசபை
- ஆனந்தசங்கரி
- ஈ.பி.ஆர்.எல்.எப்
- ஈ.பி.டி.பி
- ஈரஅனல்
- நெருப்பு
- புளொட்
- தூ
- டெலோ நியூஸ்
- இலங்கைநெற்
- மீன்மகள்
- சூத்திரம்
- மகாவலி
- உண்மைகள்
- கவிமலர்
- திருத்தியம்
- அலை
- பூந்தளிர்
- எங்கள்தேசம்
- நோயல்நடேசன்
- விடிவெள்ளி
- எங்கள்பூமி
- தமிழ்யுகே
- புயல்
- புளொட்யுகே
- யாழ்முஸ்லீம்
- புண்ணியாமீன்
- யவ்னா ருடே
- எஸ்.ஆர்.லெம்பட்
- பஷீர்
- தமிழ்யூஎன்
- கவசங்களைதல்
- தூங்காத கண்கள்
- யாழ்மண்
- தமிழ்குரல்
- துருவம்
- தினசரி
- இலங்கை முஸ்லீம்
- ஆயுள்
- ஆறாம் அறிவு
- எதுவரை
- அறிக்கை நியூஸ்
- தாய் நாடு
- ARRR
- Asientribune
- The lka academic
- Tamil Week
- The Hindu
- Daily News
- Sunday Times
- Daily Mirror
- The island
- The Sunday Leader
- ColomboPage
- Sunday Times


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (60)

**60. புலிகளின் விட்டுப்பிடிக்கும் தந்திரமும், சவூதி முறையிலான தண்டனைத் திட்டங்களும்!**


Prabaharan, Yogi and Makendraraja

புலிகள் நான்கு கைதிகளை மட்டும்தான் இவ்வாறு மக்கள் முன்னால் காட்சிப்படுத்தினார்கள். புலிகள் வசம் பல நூற்றுக்கணக்கான கைதிகள் இருந்தபோதிலும், இவர்களை மட்டும் காட்சிப்படுத்தியதின் நோக்கம், ஒரு குறியீடாக மக்களை எச்சரித்துப் பயமுறுத்துவதற்காகவே. இதைவிட வேறு வகையான சில திட்டங்களும் புலிகளிடம் இருந்திருக்கிறது.

நான் ஒன்றரை ஆண்டுகள் புலிகளின் வதை முகாம்களில் இருந்துவிட்டு 1994 ஜூன் மாதம் விடுதலையாகி வந்த பின்னர், எனது மிகவும் நெருங்கிய உறவுக்காரப் பையன் ஒருவன் என்னைப் பார்க்க வந்தான். அவன் புலிகள் இயக்கத்தில் சில ஆண்டுகளாக இருந்து வந்தான். பிரபாகரனின் பாதுகாப்புக்குப் பொறுப்பான சுமார் 1000 பேர் வரை கொண்ட சைபர் (0) குழுவில் அவன் இருந்தான். அவன் சொன்ன தகவல்களின்படி, பிரபாகரன் எங்கு தங்கியிருந்தாலும் அவரைச் சுற்றி ஏழு பாதுகாப்பு வளையங்கள் இருக்குமாம்.

பல விடயங்களையும் கதைத்த பின்னர் அவனிடம் நான், பிராபாகரனுக்கும் புலிகளின் பிரதித் தலைவராக இருந்து பிராபாகரனால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மாத்தையாவுக்கும் உள்ள பிரச்சினை பற்றி சாடைமாடையாக விசாரித்தேன். முதலில் அதுபற்றிக் கதைக்கத் தயங்கிய அவன், பின்னர் தான் சொன்னதாக எவருக்கும் கூற வேண்டாம் எனச் சொல்லிச் சில தகவல்களைக் கூறினான்.

அவன் சொன்ன தகவல்களின்படி மாத்தையாவுக்கு இந்திய உளவு அமைப்பான 'றோ' (RAW) வுடன் தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் இந்திய உளவுப்பிரிவுடன் சேர்ந்து பிரபாகரனைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியிருந்ததாகவும், எனவே அவரை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நிறுத்தி, அவரது குற்றங்களைப் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தி, சவூதி அரேபியாவில் செய்வது போல பொதுமக்களே கற்களால் எறிந்து அவரைக் கொல்வதற்குத் தலைவர் பிரபாகரன் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவன் சொன்னான்.

ஆனால் அவன் சொன்னது போலப் பின்னர் எதுவும் நடக்கவில்லை. ஆனால் புலிகள் மத்தியில் இப்படியான ஒரு பயங்கரத் திட்டம் இருந்திருக்கிறது என்பதை அவன் சொன்ன தகவல் உறுதிப்படுத்தியது. மரண தண்டனை என்ற தண்டனை முறையே இருக்கக்கூடாது எனப் பல நாடுகளிலும் அது நீக்கப்பட்டுள்ள இன்றைய நாகரீக உலகில், இந்த வகையான காட்டுமிராண்டித்தனமான ஒரு தண்டனை முறையைப் புலிகள் தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்கு எண்ணியிருந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, தற்செயலாக புலிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தால் எப்படியான நீதி நிர்வாகம் இருந்திருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

தமது பிரதித் தலைவராக இருந்தவருக்கே இவ்வகையான தண்டனை என்றால், சாதாரணமானவர்களுக்கு எப்படி இருக்கும்? மாத்தையாவுடன் சம்பந்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுத் தனியான முகாம்களில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டதும், அவர்கள் எல்லோரும் பெரும்பாலும் புலிகள் 1995 அக்டோபரில் வன்னிக்கு இடம் பெயர்ந்து செல்வதற்கு முன்னர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பதும் ஓரளவுக்கு உர்ஜிதப்படுத்தப்பட்ட செய்தி. இந்தப் பிரச்சினையில் இயக்க உறுப்பினர்கள் அல்லாத சிலரும்கூடக் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவ்வாறு கைதுசெய்யப்பட்ட பொதுமக்களில் ஒருவர் எனது சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். திருநெல்வேலி பல்கலைக்கழகச் சந்திக்கு அருகாமையில் வசித்து வந்த அவரை 'மகான்' என்று ஊரிலுள்ளவர்கள் அழைப்பார்கள். அவர் ஏற்கெனவே எனக்கு நன்கு பழக்கமானவர். திருமணம் செய்து கொள்ளாத அவர், வாடகைக்கார் ஒன்று வைத்திருந்தார். ஊரிலுள்ள எல்லா நன்மை தின்மைகளிலும் அவர் முன்னுக்கு நிற்பார். மக்கள் மத்தியிலுள்ள பிணக்குகளைப் 'பஞ்சாயத்து' செய்து வைப்பவரும் அவர்தான்.

இந்த மகான் குறிப்பிட்ட எந்தவொரு இயக்கத்தையும் சாராதவர். ஆனால் எல்லா இயக்கத்தவர்களுடனும் பழகுவார். இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த காலத்தில், மாத்தையாவின் பிள்ளை ஒன்றுக்கு ஒருமுறை சுகவீனம் வந்தபோது திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் அருகில் (பரமேஸ்வரை சந்தி) இருந்த 'சென்றல் நேர்சிங் ஹோம்' இல் சில நாட்கள் வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் 'சென்றல் நேர்சிங் ஹோம்' இற்கு அருகில் இருந்த மகான் வீட்டிலிருந்து சில உதவிகள் செய்யப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் மாத்தையாவும் ஓரிருமுறை மகான் வீட்டுக்குப் போய் வந்துள்ளார்.

இந்தத் தொடர்பை, மாத்தையாவுக்கும் இந்திய இராணுவப் புலனாய்வாளர்களுக்கும் இடையிலான உறவுக்கு மகான் தான் பாலமாக இருந்தார் எனப் புலிகளின் தலைமை அர்த்தப்படுத்தியதின் காரணமாகவே மகான் கைது செய்யப்பட்டிருந்தார். இந்தத் தகவல்கள் மகான் என்னிடம் சிறைக்குள் வைத்து இரகசியமாகத் தெரிவித்தவை. இதைத்தவிர அதில் உள்ள உண்மைகள் பொய்கள் நான் அறியாதவை.

ஒருமுறை புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மானே நேரடியாக எமது சிறைச்சாலைக்கு வந்து மகானை விசாரணை செய்தான். மற்றைய நேரங்களில் வேறு புலனாய்வாளர்கள் அவரை விசாரணை செய்தனர். ஒருநாள் விசாரணையின் பின்னர் மகானின் கண்களைக் கறுப்புத் துணி ஒன்றினால் கட்டிவிட்டு, கைகள் இரண்டையும் சிறைக் கதவுக் கம்பிகளில் பிணைத்து பல மணி நேரம் நிற்க வைத்தார்கள். மகான் பசியாலும் தண்ணீர் தாகத்தாலும் தவித்தபோதும் எதுவும் வழங்கப்படவில்லை. இறுதியில் மகான் நிற்க முடியாமல் பல தடவை துவண்டு விழுந்து, பின்னர் மயக்கமான பின்பே மகானின் கைகள் அவிழ்க்கப்பட்டு படுக்க வைக்கப்பட்டார்.

இந்த மகான் நான் விடுதலை ஆகி வந்த பின்னர், ஒருமுறை திருநெல்வெலிச் சந்திக்குச் சைக்கிளில் செல்லும் போது, வழமையாக அவர் நிற்கும் பல்கலைக்கழகச் சந்தியில் நின்று படு உற்சாகமாக "மணியண்ணை" என என்னைக் கூவி அழைத்தார். நான் அவா அருகில் சென்றதும், தன் மீதான குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய் என்பது நிரூபிக்கப்பட்டுத் தன்னை விடுதலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார். அதற்கு நான் "புலிகளை நம்பாதீர்கள்ஸ




- Yarl TV Live
- புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
- சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
- யாழ்ப்பாணத்தின் அவலம்!
- பரிசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
- பரிசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
- ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
- தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
- றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
- றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

[CNN](#)
[BBC](#)
[Newsnow](#)


புலிகள் விடுவது மாதிரி விட்டுவிட்டுத் திரும்பப் பிடிப்பார்கள். எந்த நேரமும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிறையில் புலிகள் என்னென்ன விசாரித்தார்கள் என்பதையும் யாருக்கும் சொல்லாதீர்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றேன்.

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களின் பின்னர், நான் குறிப்பிட்டது போலவே மகானை திரும்பவும் புலிகள் கைதுசெய்து கொண்டுபோய்விட்டதாக அறிந்தேன். புலிகள் விட்டுப் பிடித்தபடியால் ஏதோ நோக்கத்துடன்தான் திரும்பவும் பிடித்திருக்கிறார்கள், எனவே இனி அவரை விடமாட்டார்கள் என எண்ணினேன். அத்துடன் என்னையும் திரும்பவும் பிடிப்பார்களோ என்ற அச்சமும் என்னுள் எழுந்தது. இப்படியே அச்சத்துடன் சில மாதங்கள் கழிந்துவிட்டன.

ஒருநாள் நான் யாழ்.ஆஸ்பத்திரி வீதியால் சைக்களில் சென்று கொண்டிருக்கும்போது, அதே மகான் படு உற்சாகத்துடன் என்னைக் கூவி அழைத்தார். நான் ஆச்சரியத்துடன் அவர் அருகில் சென்றபோது, எனது கைகளைப் பிடித்துக்கொண்டு, சில சந்தேகங்கள் இருந்ததால்தான் தன்னைத் திரும்பவும் புலிகள் பிடித்ததாகவும், இம்முறை பொட்டம்மானே தன்னை நேரடியாக விசாரித்ததாகவும், பின்னர் தான் குற்றவாளி அல்லவென விட்டுவிட்டதாகவும் குறிப்பிட்ட அவர், இனிமேல் தான் எவ்வித பிரச்சினையுமில்லாமல் நிம்மதியாக இருக்கலாம் எனவும் கூறினார்.

ஏனோ இந்து முறையும் எனது மனதில் அவர் சொன்னது சரியாக இருக்கும் எனத் தோன்றவில்லை. எனவே “மகான் அண்ணை உவங்களைக் கடைசிவரையும் நம்பேலாது. எதற்கும் கவனமாக இருங்கோ” என நான் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றேன். இந்தச் சந்திப்பு நிகழ்ந்து சில நாட்களின் பின்னர், திரும்பவும் மகானை புலிகள் பிடித்துச் சென்றுவிட்டார்கள் என அறிந்தேன். இம்முறை ஏனோ இது அவரது இறுதிக் கைது என என் மனம் சொல்லியது. தண்ணீரும் மூன்று முறைதான் பொறுக்கும் என்று சொல்வார்கள். மகான் மூன்றாவது முறையாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

நான் நினைத்தது போலவே மகான் பின்னர் விடுதலை செயய்யப்படவே இல்லை. அவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்து, புலிகள் வன்னிக்கு இடம்பெயர்ந்த போது அங்கு கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் ஒரு கட்டத்தில் புலிகள் அவரைக் கொலை செய்துவிட்டதாக அறிந்தேன்.

இவ்வாறு பலரை புலிகள் விட்டுப் பிடித்துத் தீர்த்துக்கட்டியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் புதிதாக வந்த ‘வரதன்’ என்ற நபர் எனது வாயைக் கிளறுவதில் அடிக்கடி முனைந்து கொண்டிருந்தார். சிறைக்குள் இருந்த பலருக்கு இயல்பாகவே அவர்மீது ஒரு சந்தேகப் பார்வை விழுந்துவிட்டது. நான் அவரைச் சந்தேகிக்காதது போல நடந்து கொண்டேன். வரதன் தொடர்ந்து எமது கட்சியின் செயற்பாடுகள், எனக்கும் இயக்கங்களுக்கும் இடையிலான தொடர்புகள், நான் எதிர்காலத்தில் செய்ய உத்தேசித்துள்ள விடயங்கள், எனது தனிப்பட்ட குடும்ப விடயங்கள் என எதையாவது கிளறிக்கொண்டே இருப்பார்.

சுpல வேளைகளில் சோவியத் - சீன சிந்தாந்த வேறுபாடுகள், சீன - இந்திய எல்லை யுத்தம், அமெரிக்க ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்ட பின்னர் வியட்நாமுக்கும் கம்போடியாவுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுகள், கம்போடியாவில் பொல்பொட்டின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது, ஜே.வி.பியின் ஆயதக் கிளர்ச்சிகள் என பல்வேறுபட்ட விடயங்களையும் என்னுடன் அலசுவார். ஒருநாள் இரவு வெகுநேரம் வரை நாம் இருவரும் உரையாடிய சத்தம் வாசலில் காவலில் நின்ற புலி உறுப்பினனுக்குக் கேட்டுவிட்டது. அவன் அதுபற்றி காந்திக்குத் தகவல் தெரிவிக்க, காந்தி என்னை வெளியே அழைத்து நடந்தது பற்றி விசாரித்தான்.

நான் வரதனுடன் கதைத்த விடயத்தைத் தெரிவித்தேன். அதற்கு காந்தி எனக்கு ஏதாவது தண்டனை (அடி, உதை) தரக்கூடும் என எதிர்பார்த்தேன். ஆனால் அவன் எனது பதிலைக் கேட்டுவிட்டு, வரதனுடன் மட்டும் ஏதாவது விடயங்கள் கதைக்கலாம் எனவும், அதையும் மற்றவர்கள் கேட்காதவாறு கதைக்க வேண்டும் என்றும், சிறைக்குள் உள்ள மற்ற எவருடனும் அரசியலோ வேறு விடயங்களோ கதைக்கக்கூடாது எனவும் எனக்குச் சொல்லி அனுப்பினான். அவனது வார்த்தைகள் எனக்குச் சற்று நிம்மதியாக இருந்தது. அதேநேரத்தில் இந்த வரதன் யார் என்பதும், அவன் எதற்காகச் சிறைக்குள் அனுப்பப்பட்டுள்ளான் என்பதும் ஓரளவு புரிந்தது.

மறுநாள் காலை வழக்கம் போல ஒரு புலி உறுப்பினன் வந்து எனது கைதி இலக்கமான R140 என்பதைச் சொல்லி என்னை அழைத்தான். அவ்வாறு அழைப்பவன், எனது விசாரணையாளன் தயாபரனிடம் என்னைக் கூட்டிச்செல்வது வழமை. ஆனால் வழக்கத்துக்கு மாறாக என்னை அவன், தனது வட்டக் கொட்டிலுக்கு முன்னால் வேப்பமரத்துக்குக் கீழ் இருந்த காந்தியின் முன்னால் கொண்டு சென்று நிறுத்தினான்.

மீண்டும் தொடரும◌்